புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • மே 30, 2024 • புரட்சி 24 • முழக்கம் 20 • விலை ரூ.3.00

# நீதிமன்ற தீர்ப்புகளை சீரழிக்கும் ஜி.ஆர்.சாமிநாதன் நீதிபதியாக நீடிக்கக்கூடாது

## உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு கழகத் தலைவர் கடிதம்

**சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனின் அரசியல் சாசன பணிகள் மற்றும் நீதிபதி பணியின் செயல்பாடுகள் தொடர்பாக, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு, கழகத் தலைவர் கடிதம் அனுப்பியுள்ளார். பார்ப்பனர்கள் சாப்பிட்ட எச்சில் இலைகள் மீது மற்ற சமூகத்தினர் உருள விதிக்கப்பட்ட தடையை ஜி.ஆர்.சாமிநாதன் நீக்கியதை ஒட்டி, அவர்மீது நடவடிக்கைகோரி அனுப்பப்பட்டுள்ள அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளவை.**

*உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் அரசியலமைப்பு தனக்கு தந்துள்ள அதிகாரங்களை பயன்படுத்தி வழங்கிய தீர்ப்பு என்பது நீதித் துறையின் கோட்பாடுகள் மற்றும் அரசியலமைப்பு நோக்கங்களுடன் பொருந்திப் போகவில்லை.*

*தலித் பாண்டியன் என்பவர் தொடர்ந்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.மணிக்குமார், எஸ்.வேலுமணி அடங்கிய அமர்வு 28.04.2015ஆம் ஆண்டு ( வழக்கு எண் 7068/2015) தீர்ப்பு ஒன்றை வழங்கியது. அதாவது, மற்றவர்கள் சாப்பிட்ட எச்சில் வாழை இலைகள் மீது பக்தர்கள் உருளுவது என்பது மனித மாண்புக்கும், நாகரீக சமூகத்திற்கும் எதிரானது என்பதால் அதற்கு தடை விதித்தது.*


*இந்த சமயத்தில் கர்நாடகா மாநில அரசுக்கு எதிராக ஆதிவாசி புத்தகட்டு ஹிதராஷனா வேதிகே தொடுத்த வழக்கில் (வழக்கு எண் 33137/2014) உச்ச நீதிமன்றம் ஏற்கனவே அளித்துள்ள தீர்ப்பையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவது பயனுள்ளது. பார்ப்பனர்கள் சாப்பிட்டு விட்டுச் சென்ற எச்சில் இலைகள் மீது மனிதர்களை உருள வைக்கும் 'உருள சேவை' நடைமுறை என்பது இந்திய அரசியலமைப்பில் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. கர்நாடகாவாக இருந்தாலும், வேறு எங்கு இருந்தாலும் விஞ்ஞான ரீதியிலான வளர்ச்சியை சீரழிக்கும் விதமான இதுபோன்ற நடவடிக்கைகள் கண்டனத்திற்குரியது என்று உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.*

*நீதித் துறை உத்தரவு இப்படி இருக்க, அந்த தீர்ப்புகளை ஒட்டுமொத்தமாக புறந்தள்ளியதோடு,*



*பிறர் சாப்பிட்டு வைத்த எச்சில் இலைகளில் மற்றவர்கள் உருளலாம் என்ற நாகரீகமற்ற நடைமுறையை தனது தீர்ப்பின்மூலம் மீட்டெடுத்துள்ளார் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன். இது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கும், முற்போக்கான சமூக முன்னேற்றத்திற்கும் எதிரானது.*

*நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் தனி நீதிபதியாக*





*இருப்பதால், சமூக ஒழுங்கை பராமரிக்க ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட அதே விஷயத்தில், உயர் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அமர்வு மற்றும் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்புகளை புறந்தள்ளியுள்ளார். இரு நீதிபதிகள் அமர்வு அளித்த தீர்ப்பு செல்லாது என அறிவித்ததன் மூலம் ஜி.ஆர்.சுவாமிநாதன் நீதித் துறை ஒழுக்கத்தையும் மீறியுள்ளார்.*

*உயர்நீதிமன்றம் போன்ற அரசியல் சாசன நீதிமன்றங்கள், மதப் பழக்க வழக்கங்கள் என்ற பெயரில் உணவு சாப்பிட்டு விட்டு எச்சில் இலைகளில் மனிதர்களை உருள வைப்பதை அடிப்படை உரிமை என்று கருதக் கூடாது. ஜி.ஆர்.சுவாமிநாதனின் இந்த நிலைப்பாடு என்பது அரசியலமைப்புச் சட்டத்தின் உண்மையான நோக்கத்திற்கும், இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பிற்கும் எதிரானது.*

*நம் அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையே, இந்திய மக்களாகிய நாம் இந்திய நாட்டினை கட்டமைப்போம் என்றுதான் தொடங்குகிறது. அதாவது, நம் அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் எண்ணம் என்னவென்றால், 'அறிவியல் மனப்பான்மை, இறையாண்மை, சோசலிசம், மதச் சார்பின்மை மற்றும் மக்களாட்சி முறை கொண்ட குடியரசாக இந்தியாவை உருவாக்க வேண்டும்' என்பதுதான். ஆனால், ஜி.ஆர்.சுவாமிநாதனின் தீர்ப்பு என்பது அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்புகளின் மதிப்புகளையே குறைப்பது போல உள்ளது.*

*சாதி, மத வேறுபாடுகள் அடிப்படையில் ஒற்றைச் சார்பு ஆதரவு நிலை எடுத்து நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் கொடுத்துள்ள பல தீர்ப்புகளில் இதுவும் ஒன்று. ஆகவே, நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் உயர்நீதிமன்ற நீதிபதியாக, குறிப்பாக தமிழ்நாட்டு உயர் நீதிமன்றங்களில் நீதிபதியாக நீடிப்பது ஏற்புடையது அல்ல.*

*அதுபோலவே, எதிர் தரப்பினர் பதில் மனுத் தாக்கல் செய்வதற்கு கூட வாய்ப்பு அளிக்காமல், அதுவும் ஓரிரு நாட்களில் தேவையற்ற அவசரத்துடன் வழங்கப்பட்ட சர்ச்சைக்குரிய தீர்ப்புகள் குறித்து விரிவான விசாரணை நடத்த தாங்கள் உத்தரவிட வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறேன். உங்களின் உடனடி நடவடிக்கை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் மூலம் நீதித் துறை சீரழிவதை தடுப்பதை உறுதி செய்யும்.*

*ஆதாரங்கள் : சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் 17.05.2024 தேதியிட்ட W.P(MD) 10496/2024 மனு மீது பிறப்பித்த உத்தரவுகள்.*

# புத்துயிர் பெறும் சமத்துவபுரங்கள்!

*ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை சார்பில் கடந்த 3 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கியப் பணிகள் குறித்த விவரங்களை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. அதில் முந்தைய 10 ஆண்டுகால அதிமுக ஆட்சியில் முடங்கிக் கிடந்த "பெரியார் நினைவு சமத்துவபுரங்கள்" புதுப்பொலிவு பெற்று வருவது குறித்த விவரங்களும் இடம்பெற்றுள்ளன.*

*"முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் 2021ஆம் ஆண்டு ஜூன் 24ஆம் தேதி சட்டப்பேரவையில் தமிழ்நாட்டில் கட்டப்பட்ட 238 சமத்துவபுரங்களும் சீரமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, மக்களின் பயன்பாட்டிற்கு ஒதுக்கப்படாத 4 சமத்துவபுரங்கள் உட்பட 149 சமத்துவபுரங்களை முதற்கட்டமாக 2021-22ம் ஆண்டில் சீரமைப்பதற்காக ரூ.194.44 கோடி*





*நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 98% பணிகள் முடிவுற்று மீதமுள்ள சில பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. மேலும், இரண்டாம் கட்டமாக 2022-2023ம் ஆண்டில் மீதமுள்ள 88 சமத்துவபுரங்களைச் சீரமைக்க ரூ. 67.01 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் 99% பணிகள் முடிவுற்று மீதமுள்ள சில பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன." என்று அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*ஊர்- சேரி பாகுபாடு ஒழிந்த, ஜாதிய ஆதிக்கமற்ற சமத்துவ சமுகம் எப்படி இருக்கும் என்பதற்கான முன்மாதிரித் திட்டமான "பெரியார் நினைவு சமத்துவபுரங்கள்" மீண்டும் புத்துயிர் பெறுவது வரவேற்புக்குரியது. மற்ற மாநிலங்களுக்கும் கடத்தப்பட வேண்டிய "திராவிட மாடல்" சாதனைகளில் இதுவும் ஒன்று.*

தலையங்கம்

# பள்ளிக்கல்வித்துறையின் பணிகள் தொடரட்டும்!

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி டென்மார்க், சுவீடன், நார்வே ஆகிய மேற்கத்திய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அந்நாடுகளின் கல்வி வளர்ச்சி, கற்றல் திறன் ஆகியவற்றை நேரில் ஆய்வுசெய்து, தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறையின் செயல்பாடுகளையும் அவர்களிடம் எடுத்துரைத்துள்ளார். குறிப்பாக நார்வே நாட்டில், பயன்பாட்டு அறிவியல் பல்கலைக்கழக (The New Western Norway University) நூலகத்தைப் பார்வையிட்டு, ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் தலைமை நிர்வாகிகளிடம் கலந்துரையாடினார். நார்வே நாட்டு ஆசிரியப் பெருமக்களை நமது தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்தும், நமது ஆசிரியர்களை அந்நாட்டிற்கு அனுப்பியும் அறிவுசார் பரிமாற்றம் மேற்கொள்வதற்கான வரைவுத் திட்டம் ஒன்றையும் முன்வைத்துள்ளார்.

ஒன்றிய பாஜக ஆட்சியில் வரலாற்றைத் திரித்து, புராண இதிகாச குப்பைகளைப் பாடத்திட்டங்களில் சேர்க்கும் மோசடியான செயல்கள் சில வடமாநிலங்களில் அரங்கேறும் சூழலில், கல்வி வளர்ச்சியில் உச்சத்தில் இருக்கும் நார்வே நாட்டுடன் தமிழ்நாடு அரசு அறிவுசார் பரிமாற்றம் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவது பெரும் பாராட்டுதலுக்குரியது. உலகின் மிகச்சிறந்த கல்வி கட்டமைப்புகளைக் கொண்ட நாடுகளில் ஒன்று நார்வே. அந்நாட்டில் எழுத்தறிவு பெற்றோர் 100%.

இதற்கு அந்நாட்டின் கல்வி கட்டமைப்புகளே காரணமாக உள்ளன. நார்வேயில் 6 வயது 16 வரையிலான குழந்தைகளுக்கு இலவச கட்டாயக் கல்வி வழங்கப்படுகிறது. அதற்குமேல் பட்டப் படிப்புகளும் அங்கு இலவசமே. குழந்தை பிறந்தவுடன் பெண்கள் வேலைக்கு செல்ல இயலாது என்ற சமூகத்தடையும் அங்கு இல்லை. ஒரு வயதில் இருந்தே குழந்தைகளை பராமரிக்க மழலையர் பள்ளிகள் அங்கு சிறப்பாகச் செயல்படுகின்றன. இத்தகைய சிறப்பான கல்விக் கட்டமைப்பைக் கொண்டுள்ள நார்வேயில் தமிழ்நாட்டின் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் சுற்றுப்பயணம் செய்து, அங்குள்ள வசதிகளை அறிந்து வருவது நிச்சயம் தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு உதவும்.

கடந்த 3 ஆண்டுகளில் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் பள்ளிக்கல்வித்துறை பல முக்கியமான முன்னெடுப்புகளைச் செய்திருக்கிறது. கொரோனா காலத்தில் கணிசமாக அதிகரித்திருந்த இடைநிற்றலை சரிசெய்ய ‘இல்லம் தேடிக் கல்வி’ திட்டம் உதவி புரிந்தது. அரசுப்பள்ளி மாணவர்களின் தனித்திறனை வெளிக்காட்டும் வகையிலும், பள்ளிச்சூழலை இனிமையானதாக மாற்றும் வகையிலும் கலைத் திருவிழாக்கள் நடத்தப்பட்டன. எண்ணும் எழுத்தும் திட்டத்தின்கீழ் அரசுப்பள்ளி ஆசிரியர்களுக்கு கற்றல் கற்பித்தல் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன.

நான் முதல்வன், பள்ளி மேலாண்மைக் குழுக்கள், பள்ளி செல்லாப் குழந்தைகளைக் கண்டறிய செயலி, சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு சிறப்பு நிதி, 1 முதல் 3-ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு எண்ணும் எழுத்தும் இயக்கம், பயிற்சித் தாள்களுடன் கூடிய பயிற்சிப் புத்தகங்கள், 9 முதல் 12-ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு வினாடி வினா போட்டிகள், ‘மாணவர் மனசு’ என்ற ஆலோசனைப் பெட்டி, கணித ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி, உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள், வகுப்பறை உற்றுநோக்கு செயலி மற்றும் மின் ஆசிரியர் என்ற உயர்தர டிஜிட்டல் செயலி என ஏராளமான முன்னெடுப்புகளை தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை கடந்த 3 ஆண்டுகளில் மேற்கொண்டுள்ளது.

அம்முயற்சிகளுக்கான பலன் இந்த ஆண்டு 10 மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகளில் மிகத் துல்லியமாக வெளிப்பட்டுள்ளது. இந்த ஆண்டு பனிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி விகிதம் 94.56 விழுக்காடாகவும், பத்தாம் வகுப்பு தேர்ச்சி விகிதம் 91.55 விழுக்காடாகவும் அதிகரித்துள்ளது. பனிரெண்டாம் வகுப்புத் தேர்வில் 397 அரசுப் பள்ளிகளும், பத்தாம் வகுப்புத் தேர்வில் 1,364 அரசுப் பள்ளிகளும் 100 விழுக்காடு தேர்ச்சியைப் பெற்றுள்ளன. பள்ளிக்கல்வித்துறையின் சீரிய முன்னெடுப்புகளால் கற்றல் திறன் மேம்பட்டிருக்கிறது என்பதை இதன்மூலம் உறுதி செய்ய முடிகிறது.

இந்த பின்னணியில்தான் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் நார்வே பயணமும் தமிழ்நாட்டின் கல்வித்துறையை மேலும் வளப்படுத்த உதவும் என்ற நம்பிக்கை பிறக்கிறது. நார்வே நாட்டின் பாடத்திட்டங்கள் நமது மனப்பாடக் கல்வி முறையைப் போலல்லாமல், மாணவர்களின் அறிவுத்திறனை வளர்க்கும் விதமான பாடத்திட்டங்களாக உள்ளன. நமது பாடமுறையிலும் அத்தகைய மாற்றங்கள் காலத்திற்கேற்ப மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம்.

இந்தியாவில் கல்வி வளர்ச்சியில் கேரளாவும், தமிழ்நாடுமே முதல் 2 இடங்களில் உள்ளன. அதிலும் உயர்கல்வி சேருவோர் விகிதத்தில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதலிடத்தில் இருக்கிறது. மேற்கத்திய நாடுகளின் பாணியை நமது பள்ளிகளிலும் பின்பற்றுவது இடைநிற்றலை ஒழித்து, மனப்பாடக் கல்வி முறையை சீரமைக்க உதவும். அந்தவகையில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சரின் இம்முயற்சி வரவேற்கத்தக்கது.

கல்வி வளர்ச்சியில் நாம் ஒவ்வொரு அடியாக முன்னோக்கி வைத்தால், இருக்கிற பாடமுறையையும் சீரழிக்கும் விதமாக ஒன்றிய அரசு நீட், புதிய கல்விக்கொள்கை என ஆரிய சனாதனக் கொள்கையைத் திணிக்கும் முயற்சிகளில் தொடர்ச்சியாக ஈடுபடுகிறது. கல்வியை பொதுப்பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்றும்போது, இத்தகைய தொல்லைகள் தனாகவே ஒழிந்துவிடும். காங்கிரஸ் கட்சி இத்தேர்தலில் அந்த வாக்குறுதியை அளித்திருப்பதும் நினைவுகூறத்தக்கது.

# மாணவர் மரணத்திற்கு நீதிகேட்டு ஆர்ப்பாட்டம்!

*கடலூர் :* தஞ்சை மருத்துவக் கல்லூரி மாணவர் அஜித் குமாரின் மரணத்திற்கு நீதி கேட்டு கடலூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம், மக்கள் அதிகாரம், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி உள்ளிட்ட அமைப்புகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டமானது 11.05.2024 அன்று மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் அருகில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு கழக கடலூர் மாவட்டத் தலைவர் சிவக்குமார் தலைமை தாங்கினார்.

விசிக கலைக்குழு பேரவை தலைவர் சேரி குயில் சேட்டு, திராவிட மகிழன் ஆகியோர் புரட்சிகர பாடல்களை பாடினார்கள்.

ஒடுக்கப்பட்டோர் தன்னுரிமை சங்க புதுச்சேரி தலைவர் போதி சந்தானம், அம்பேத்கர் தொண்டர் படை மக்கள் நூற்றாண்டு இயக்கம் மாவட்ட செயலாளர் முருகன், தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாநில செயலாளர் பழ.வாஞ்சிநாதன், விசிக தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர் பணியாளர் பேரவை மாநில பொதுச் செயலாளர் பெரியாண்டவர், திராவிடர் கழக மாவட்டச் செயலாளர் எழிலேந்தி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி தலைவர் மாநில செயற்குழு உறுப்பினர் பால்ராஜ், விசிக மாநில அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் தோழர் திச திருமார்பன், மக்கள் அதிகாரத்தின் கடலூர் மாவட்டச் செயலாளர் பாலு ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

நிறைவாக கூடலூர் மாவட்டக் கழகச் செயலாளர் சதிசு நன்றி கூறினார்.

ஆர்ப்பாட்டத்தில் மாணவர் அஜித் குமாரின் தற்கொலைக்கு காரணமான அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

# நீதிமன்றத்தில் மத விழா!- கழகம் புகார்




ஈரோட்டில் அரசுக்கு சொந்தமான ஈரோடு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வலம்புரி கற்பக விநாயகர் திருக்கோவிலில் 19.05.2024 அன்று கும்பாபிஷேக விழா நடத்த திட்டமிடப்பட்டது. “அரசுக்கு சொந்தமான நீதிமன்ற வளாகத்திற்குள் குறிப்பிட்ட மதம் சார்ந்த நிகழ்ச்சிகளை முன்னெடுப்பது, இந்திய அரசமைப்புச் சட்டம் சொல்லும் மதச்சார்பற்ற தன்மையை சீர்குலைக்கும் வகையில் அமைந்துள்ளது. எனவே மத வழிபாட்டு விழாவை தடுத்த வேண்டும்” என்று திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில், கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி ஈரோடு மாவட்ட தலைமை நீதிபதி அவர்களிடம் 17.05.24 அன்று விண்ணப்பம் அளித்திருந்தார்.

எனினும், அரசு விதிமுறைகளை மீறி கும்பாபிஷேக விழா நடத்தப்பட்டிருக்கிறது. ஊடகங்களிலும் அதுகுறித்த செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இதுதொடர்பாக சட்ட ரீதியிலான அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

# சத்தியமங்கலத்தில் பெரியார் படிப்பகம் திறப்பு



**ஈரோடு வடக்கு :** தந்தை பெரியார் படிப்பகம் திறப்பு விழா 26.05.2024 சத்தி பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது.

நிகழ்விற்கு வழக்கறிஞர் தமிழரசன் தலைமை தாங்கினார். சத்தி ஒன்றிய செயலாளர் சிதம்பரம் வரவேற்புரையாற்றினார். வழக்கறிஞர் செகதீஸ்வரன், மாவட்டத் தலைவர் நாத்திக சோதி, மாவட்ட அமைப்பாளர் கோபி நிவாசு, மாவட்டச் செயலாளர் செல்வக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தந்தை பெரியார் படிப்பகத்தை கழக வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

நிறைவாக தமிழ்நாடு அறிவியல் மன்றத் தோழர் கிருட்டிணசாமி நன்றி கூறினார். இதில் கோபி, நம்பியூர், தூ.நா.பாளையம் மற்றும் சத்தி ஒன்றிய கழகத் தோழர்கள், பொதுமக்கள் என ஐம்பதுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## மனிதமே முதலில்....

1936ஆம் ஆண்டு சென்னை நகராட்சி உறுப்பினர் பதவிக்கு பெத்துநாயக்கன்பேட்டையில் போட்டியிட்டார் அண்ணா. அண்ணாவுக்கு ஓட்டு போட்டால் ஆலயங்களில் விளக்கு எரியாது என்று எழுதியது ஜெயபாரதம் ஏடு. அதற்கு அண்ணா, “நகரின் சேரிகள் பன்னெடுங்காலமாக இருளில் மூழ்கிக் கிடக்கின்றன. முதலில் அவைகளுக்கு விளக்கு போட வேண்டும். அதற்குப் பிறகு பணமும் நேரமும் மிச்சமிருந்தால் ஆலயங்களில் விளக்கு எரியும். நண்டும் நட்டுவாக்கிளியும் கடித்துத் துன்பப்படும் சேரி மக்களுக்கு விளக்கு போடாமல் ஆலயங்களுக்குப் போட்டுப் பயனில்லை” என்று பதில் கொடுத்தார். அப்படியானால் உனக்கு ஓட்டு இல்லை என்று சிலர் கூற, உங்கள் ஓட்டு எனக்குத் தேவையே இல்லை என்று கூறிவிட்டார் அண்ணா.

# எச்சில் இலை தீர்ப்பு



எச்சில் இலையில் அங்கபிரதிஷ்டம் செய்வது குற்றமல்ல, அது 500 ஆண்டுகால சடங்கு, மகாபாரதத்திலேயே இதுகுறித்து சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இதை யாரும் தடைசெய்யமுடியாது என்று புரட்சிகரமான தீர்ப்பை வழங்கியிருக்கிறார் மதுரை உயர்நீதிமன்ற கிளை நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதன். நாம் வணங்கும் கடவுள் கூட பிராமண எச்சில் இலை என்று சொன்னால் அதை உடனே ஏற்றுக்கொண்டு பக்தனின் கோரிக்கையை உடனடியாக தீர்த்துவைத்துவிடுவார்கள். ஆனால் சூத்திரன் எச்சில் இலை என்றால் மட்டும் அது தெய்வ குத்தம் ஆகிவிடும். இப்படி பிராமணர்களே ஒரு சடங்கை உருவாக்கிவிட்டார்கள். அதற்கு இப்போது சட்டமும் துணையாக வந்துநிற்கிறது.

பிராமணர்களுக்கும் போஜனத்திற்கும் உள்ள தொடர்புக்கு ஏராளமான வரலாறுகள் இருக்கின்றன.

பிராமண போஜன விருந்து போட்டால் அடுத்த ஜென்மத்தில் புண்ணியம் கிடைக்கும் என்று அந்த காலத்தில் பிராமண போஜனங்கள் நடந்தன. பெரியாரின் தந்தை கூட அப்படி பிராமண போஜனம் நடத்தியவர் தான். அந்த போஜன விருந்திற்கு ஒரு மோசடி பார்ப்பான் வந்தான். ஊரை ஏமாற்றிய அந்த பார்ப்பானை பெரியாரும் அந்த விருந்துக்குள் சென்று கையும் களவுமாக பிடித்தார். உடனே பிராமணர்கள், பிராமண போஜனத்தில் சூத்திரன் நுழைந்து புனிதத்தை கெடுத்துவிட்டான் என்று பெரியாரின் தந்தையிடம் சென்று முறையிட்டனர். பதறிப்போன பெரியாரின் தந்தை, அந்த பார்ப்பனர்களுக்கு முன்பே பெரியாரை கடுமையான வார்த்தைகளால் திட்டி அவமானப்படுத்தினார்.

குடிஅரசு பத்திரிகையில் ஏராளமான கட்டுரைகளை எழுதிவந்த கைவல்ய சாமியார் ஒரு விருந்தில் சாப்பிடும் போது, அவரை பார்த்து ஒரு பார்ப்பான் சூத்திரன் என்று கூறிய போது எச்சில் கையுடன் எழுந்து கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டார் கைவல்யசாமிகள். **“சூத்திரன் என்றால் ஆத்திரம் கொண்டு அடி”** என்ற கல்வெட்டு சாசன மொழி அப்போதுதான் உதயமானது.

வடநாட்டு புண்ணிய தலங்களில் பிராமணர்கள் மட்டுமே சாப்பிடக்கூடிய சத்திரங்கள் இருந்தன. பெரியார் தனது வீட்டை விட்டு வெளியேறி வடநாடு சென்ற போது அந்த சத்திரத்துக்குள் சாப்பிட சென்றார். இங்கு பிராமணர்களுக்கு மட்டுமே அனுமதி என்று கூறி பெரியாரை வெளியே அனுப்பிவிட்டனர்.

நீடாமங்கலத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டு பந்தியில் இரண்டு தலித் தோழர்கள் சாப்பிட்டார்கள் என்பதற்காக அவர்களை மரத்தில் கட்டிவைத்து அடித்தார்கள். பெரியாரின் குடிஅரசு இதை எதிர்த்து போர்க்கொடி உயர்த்தியது.

கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் தமிழ்நாட்டில் இருந்து சென்ற பிராமண பிரமுகர்களுக்காக, அவர்கள் போஜனம் செய்வது பிற ஜாதியினருக்கு அதாவது (சூத்திர காந்தி சீடர்களுக்கு) தெரிந்துவிடக்கூடாது அல்லது பார்த்துவிடக்கூடாது என்பதற்காக அவர்களுக்கு தனிக் கூடாரம் அமைக்கப்பட்டது. பிராமணர்களுக்கு தனி போஜன வழிபாட்டு வசதி என்று மாநாட்டுக் குழு விளம்பரமே செய்தது. காந்தி கூட இதைக் கண்டித்து எழுதியிருக்கிறார்.

பெரியார் காங்கிரஸ் கட்சியில் இருந்த போது தான் சந்தித்த பிராமண போஜனம் பற்றி கூறியிருக்கிறார். திண்டுக்கல், பெரியகுளம் பகுதிகளுக்கு கட்சி வேலைகளுக்காக சென்ற போது அங்கு சாப்பாடு போட்ட பார்ப்பனர்கள் வீட்டில் என்ன நடந்தது? காலை சாப்பாடு சாப்பிட்ட எச்சில் இலை, மதியம் சாப்பிடும் போதும் அந்த இலை எடுக்கப்படாமல் அப்படியே ஈ மொய்த்துக் கொண்டிருந்தது என்று பெரியார் பதிவு செய்திருக்கிறார்.

காங்கிரஸ் கட்சி நிதியில் வ.வே.சு அய்யர் நடத்தி வந்த சேரன்மாதேவி குருகுலத்தில் நடந்த போஜனத்தில் பிராமணர்களுக்கு தனி இடத்திலும், சூத்திரர்களுக்கு தனி இடத்திலும் நடந்த போது பெரியார் அதை எதிர்த்து கேள்விக் கேட்டார்.

இப்போதும் கோயில்களில் சூத்திரர்களுக்கு சுபமுகூர்த்தம் நடத்திவைக்கும் புரோகிதர்கள், அரிசி,பருப்பு, தேங்காய், நெய் ஆகியவற்றை மூட்டை கட்டுவார்களே தவிர அந்த விவாஹ விருந்தில் போஜனம் செய்வதை தவிர்த்து விடுவார்கள்.

பிரபல ஹோட்டல்களில் அண்மைக்காலமாக சர்வர்கள் எல்லாம் அவாள்கள். எச்சில் இலைகளை எடுத்து, பெஞ்சை சுத்தப்படுத்துவது எல்லாம் சூத்திரர்கள்.

1941ம் ஆண்டுவரை அன்றைய ரயில்நிலைய உணவு விடுதிகளில் பார்ப்பனர்கள் சாப்பிடுவதற்கென்று தனி அறை இருந்தது. பெரியார்தான் இதை எதிர்த்து இந்த தீண்டாமைக்கு முடிவு கட்டினார்.

நமது பெருமைமிகு சனாதன கலாச்சாரத்தில் பிராமண போஜனத்துக்கு பெருமை இருந்தாலும் கழிப்பறை திறந்தவெளியாகவே இருந்தது. பூணூல் போட்டுக்கொண்டு போஜனம் செய்யும் பிராமணர்கள் கழிவு வேலை செய்யும் போது முதுகு பூணூலை காதுக்கு கொண்டுவந்து சூத்திரராகி கடமை முடிந்த பிறகு பூணூலை முதுகுக்கு மாற்றி பிராமணராகிவிடுவார்கள்.

இப்படி பிராமண போஜனத்துக்கு என்று பல வரலாற்றுத் தடங்கள் பதிந்து கிடக்கின்றன. நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதன் தன்னுடைய தீர்ப்பில் இவைகளை எல்லாம் சுட்டிக்காட்டி இருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

இப்போதெல்லாம் பிராமணர்கள் மாறிவிட்டனர், அவர்கள் சமபந்திக்கு தயாராகிவிட்டனர். இன்னும் கடந்த காலங்களையே பேசிக்கொண்டு இருக்கலாமா? என்று கேட்கலாம். கேள்வி நியாயமானது தான். "விமானத்தில் பயணம் செய்கின்ற பிராமணர்கள் சிக்கன் கறியை கேட்பதற்கு முன்பு ரெட் ஒயின் அல்லது விஸ்கி தீர்த்தம் கொண்டுவரச் சொல்லி அதை அருந்திய பின்புதான் சாப்பிடவே தொடங்குகிறார்கள். *Multi Cusine* - இல் இத்தாலி, தாய்லாந்து நாட்டு உணவுகளில் எது சுவை மிகுந்தது என்பதெல்லாம் அவர்களுக்கு அத்துப்படி. சீன உணவுகளுக்கு சுவிகி, சுமோட்டோவில் ஆர்டர் செய்கிறார்கள். ஆனாலும் கூட பிராமணன் சாப்பிட்ட எச்சில் இலையின் மகத்துவத்தை எவரும் பறித்துவிட முடியாது. காலம் காலத்திற்கும் அந்த எச்சில் இலை அந்த புனிதம் சனாதனம் என்ற பெயரில் நீடித்துக்கொண்டே இருக்கும். இதைத்தான் நீதிபதி ஜி.ஆர். சாமிநாதன் கூறியிருக்கிறார்.

உச்சநீதிமன்றம் இதற்கு தடை போட்டால் என்ன? அதைப்பற்றி எனக்கு கவலை இல்லை. சட்டத்தோடு வைதீகத்தையும் சேர்த்துக் கரைத்துக்குடித்தவன் நான். சட்டம் ஏற்றாலும், எனது சனாதனக் கொள்கை நிச்சயம் ஏற்காது. எனவே எனது தீர்ப்புகள் இப்படித்தான் இருக்கும் என்று அடித்து கூறுகிறார் நீதிபதி. பெரியார் திரைப்படத்தில் ஒரு பாடல் உண்டு. **“நீங்கள் மட்டும் நீங்கள் மட்டும் விந்துக்கு பிறந்தவரா? நாங்கள் மட்டும் நாங்கள் மட்டும் எச்சிலுக்கு பிறந்தோமா?” சட்டம் படித்த மனுநீதிக் காவலர்களே! பதில் சொல்லுங்கள்!**

**கோடங்குடி மாரிமுத்து**

# இனப்படுகொலை செய்யும் இஸ்ரேல்!

காசாவில் கூடாரங்களில் தஞ்சம் புகுந்திருந்த பாலஸ்தீனர்களின் மீது நேரடியாக குண்டு வீசி படுகொலை செய்துள்ளது இஸ்ரேல் ராணுவம். குண்டு வீச்சினால் கூடாரங்களில் தீப்பிடித்ததால் அங்கி ருந்த மக்கள் உயிருடன் எரிந்து பலியாகினர். அதோடு பல குழந்தைகள் தலைசிதறி பலியான கொடூரத்தை கண்டு உலகமே அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது. காசா மீதான போர் மற்றும் அங்கு இஸ்ரேல் நடத்திடும் கொடூர நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்த வேண்டும் என சர்வதேச நீதிமன்றம் மே 24 அன்று தீர்ப்பு வழங்கியது. தீர்ப்பு வழங்கப்பட்ட பின்பும் கூட இஸ்ரேல் ராணுவம் ஒரு நாள் கூட போர் நடவடிக்கைகளை நிறுத்தாமல் தொடர்ந்து இனப்படுகொலைகளை அரங்கேற்றி வருகிறது.

குறிப்பாக பாலஸ்தீன மக்களின் கடைசிப் புகலிடமாக இருக்கும் ரஃபா நகரிலும் இஸ்ரேல் ராணுவம் சில வாரங்களுக்கு முன்பு தரைவழித் தாக்கு தல்களை துவங்கியது. இதற்கு உலகம் முழுவதும் இருந்து பாலஸ்தீன ஆதரவுக் குழுக்களும், சில ஆதரவு நாடுகளும் எதிர்ப்புத் தெரிவித்தன. இது ரஃபா பகுதியில் ரத்த ஆற்றையே உரு வாக்கி விடும் என்றும் கடுமையான கண்டனங்கள் எழுந்தன. இந்த தருணத்தில் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகளை தீவிரப்படுத்தி ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என ஐ.நா பொதுச்செயலாளர் அந்தோனியோ



குட்டரெஸ் தெரிவித்திருந்தார். எனினும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன் யாகு போர் நிறுத்த பேச்சுவார்த்தையை தவிர்த்தார். ரஃபா பகுதியில் இருந்த 10 லட்சத்துக்கும் அதிகமான பாலஸ்தீனர்களை மீண்டும் அங்கிருந்து வெளி யேற இஸ்ரேல் ராணுவம் மிரட்டியதோடு குண்டுகளை வீசி இனப்படுகொலை தாக்குதல்களை தீவிரப்படுத்தியது. இந்த தாக்குதல்களின் ஒரு பகுதியாக பாலஸ் தீனர்களின் கூடாரங்களின் மீது குண்டுகளை வீசி யுள்ளது

இஸ்ரேல் ராணுவம். இந்த கொடூரமான தாக்கு தலில் 40 க்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் குடும்பத்து டன் எரிந்து பலியாகியுள்ளனர். குழந்தைகள் தலை வெடித்துச் சிதறி கொடூரமாக பலியாகியுள்ள காணொலி கள் சமூக வலைத்தளத்தில் பரவி வருகிறது. இந்த கொடூரமான தாக்குதல்கள் அனைத்தும் போரை நிறுத்த சர்வதேச நீதிமன்றம் உத்தர விட்ட அடுத்த 48 மணி நேரத்திற்குள் நடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்த 48 மணி நேரத்தில் இஸ்ரேல் 60 க்கும் மேற்பட்ட முறை வான்வழியாக குண்டுகளை வீசியுள்ளது. பல இடங்களின் தரைவழித் தாக்குதல்களையும் டாங்கிகள் மூலம் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளது இஸ்ரேல் ராணுவம்.

நுசிரத் மற்றும் ஜபாலியா அகதிகள் முகாம்கள், காசா நகர், ரஃபா நகரம், வடக்கு மற்றும் மத்திய காசா பகுதிகளில் இந்த கொடூரமான தாக்குதல்களை நடத்தியுள்ளது இஸ்ரேல் ராணுவம். இந்த தாக்குதல் களால் கிட்டத்தட்ட 160 பாலஸ்தீனர்கள் படுகொலை யாகியுள்ளனர். கொலையானவர்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளே அதிகம். 2023 அக்டோபர் 7 முதல் காசா மீதான இஸ்ரேலின் இனப்படுகொலை போரில் 35,984 பாலஸ்தீனர்கள் படுகொலையாகியுள்ளனர். 80,643 பேர் வரை காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நன்றி : தீக்கதிர்**

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# ஈட்டியாய் கருத்தியல் பாய்ச்சிய மடத்துக்குளம் பயிலரங்கம்!

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் பெரியாரியல் பயிலரங்கம் மடத்துக்குளம் சூர்யா மகாலில் மடத்துக்குளம் மோகன் அரங்கில் மே 21, 22 ஆகிய இரண்டு நாட்கள் மிக சிறப்பாக நடைபெற்றது.

முதல் நாள் மே 21ஆம் தேதி காலை 9:30க்கு தோழர்கள் அறிமுக நிகழ்ச்சி தொடர்ந்து பயிலரங்கின் நோக்கம் குறித்து எடுத்துரைத்து தோழர்களை வரவேற்று கழகத்தின் வெளியீட்டுச் செயலாளர் கோபி இராம.இளங்கோவன் உரையாற்றினார்.



முதல் வகுப்பு காலை 10.00 மணிக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் “வகுப்புவாரி பிரதிநிதித்துவம்” என்னும் தலைப்பிலும், இரண்டாவது அமர்வாக பிற்பகல் 12.15 மணிக்கு தமிழ்நாடு அறிவியல் மன்றத்தின் தலைவர் சிவகாமி “கடவுள் மறுப்பு தத்துவம்” என்னும் தலைப்பிலும், மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு மூன்றாவது அமர்வாக மாலை 03.15 மணிக்கு திராவிடர் விடுதலைக் கழகத்தின் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் அவர்கள் “திராவிடர் இயக்க வரலாறு” எனும் தலைப்பில் வகுப்புகள் எடுத்தனர்.




நான்காம் அமர்வாக இரவு 07.00 மணிக்கு “உலகம் தோன்றியது எப்படி? எனும் தலைப்பில் பேராவூரணி “தா.கலைச்செல்வன்” வகுப்பெடுத்தார். இத்துடன் முதல் நாள் நிகழ்ச்சிகள் நிறைவடைந்தன.

இரண்டாம் நாள் பயிலரங்கம் முதல் வகுப்பாக காலை 09.00 மணிக்கு “திராவிடர் இயக்கத்தின் இன்றைய தேவையும்” “பெரியார் மீதான அவதூறுகளும்’, எனும் தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் வகுப்பும், தொடர்ந்து காலை 11.30க்கு இரண்டாவது அமர்வாக “தி.வி.க. கட்டமைப்பும், செயல்பாடும்” எனும் தலைப்பில் கழக வெளியீட்டுச் செயலாளர் கோபி இராம.இளங்கோவனும் வகுப்பெடுத்தனர். மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு பிற்பகல் 2:30க்கு காலை முதல் அமர்வின் தொடர்ச்சியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களின் வகுப்பு தொடர்ந்தது.



நிறைவாக மாலை 04.15 மணியளவில் “அய்யம் தெளிதல்” நிகழ்ச்சியில் தோழர்கள் கேட்ட பல்வேறு கேள்விகளுக்கு பெரியாரியப் பார்வையில் கழகத் தலைவர் “கொளத்தூர் மணி” மிக சிறப்பாக நீண்ட நேரம் தன்னுடைய பதில்களை அளித்தார்.

இந்நிகழ்ச்சியுடன் 2 நாள் மடத்துக்குளம் பயிலரங்கம் மிகச் சிறப்பாக நிறைவுற்றது.

கோவை திருப்பூர் ஈரோடு மாவட்டங்களில் இருந்து 70 தோழர்கள் உற்சாகமாய் பங்கேற்று பயிலரங்கில் பல்வேறு புதிய செய்திகளை அறிந்து கொண்டார்கள். மிகுந்த ஒழுங்கும் கட்டுப்பாடுடனும் இந்த பயிலரங்கு நடைபெற பங்கேற்ற தோழர்கள் மிகவும் ஒத்துழைப்பு நல்கினார்கள்.அந்தந்த மாவட்ட பொறுப்பாளர்கள் தோழர்களை ஒருங்கிணைக்கும் பணிகளை சிறப்பாக செய்திருந்தனர்.

பயிலரங்கில் கலந்து கொண்ட அனைத்து தோழர்களுக்கும் குறிப்பேடு மற்றும் எழுதுகோல் வழங்கப்பட்டது.

வகுப்புகள் நடைபெறும் பொழுது பங்கேற்ற தோழர்கள் கருத்துக்களை தங்கள் குறிப்பேடுகளில் குறித்து பதிவு செய்து கொண்டார்கள்.

நிறைவு நாளன்று பயிலரங்கிற்கு வருகை தந்த திமுகவின் பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் ஈசுவரசாமி கழகத்தின் செயல்பாடுகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தும், கழகம் மேற்கொண்ட தேர்தல் பரப்புரைகளுக்கு நன்றி தெரிவித்தும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களுக்கு பயனாடை அணிவித்துப் பாராட்டு தெரிவித்தார்.

இப்பயிலரங்கு 2 நாட்கள் மிக சிறப்பாக நடைபெறுவதற்கு பம்பரமாய் சுற்றிச்சுழன்று பணியாற்றியதில் மடத்துக்குளம் சிவானந்தம் அவர்களுடைய பணி முக்கியமானது. உடன் கணக்கன் அவர்களும் பயிலரங்கிற்கான பணிகளைக் கவனித்துக் கொண்டார். அவர்களுக்கு கழகத் தலைவர் பாராட்டு தெரிவித்து நினைவு பரிசாக புத்தகங்களை வழங்கினார்.

பயிலரங்கம் நடைபெற்ற சூர்யா மகால், பொள்ளாச்சி நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் ஈசுவரசாமிக்கு சொந்தமானது ஆகும். வாடகைக் கட்டணம் ஏதுமின்றி 2 நாட்கள் பயிலரங்கு நடத்த அம்மண்டபத்தை கழகத்திற்கு அவர் வழங்கினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் ஈஸ்வரசாமிக்கு “கருஞ்சட்டைக் கலைஞர்” நூலை நினைவுப் பரிசாக வழங்கினார்.

2 நாள் பயிலரங்கில் தோழர்களுக்கான சுவையான உணவுகளை சிறப்பாக சமைத்த சமையற்கலைஞர் நல்லூர் மனோகரன் குழுவினருக்கு கழகத் தலைவர் பாராட்டு தெரிவித்து புத்தகங்களைப் பரிசாக வழங்கினார்.

பயிலரங்கிற்கான பணிகளை கழகப் பொருளாளர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், கோவை மாவட்ட செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம், திருப்பூர் அய்யப்பன் ஆகியோர் முன்னின்று செய்தனர்.

பயிலரங்கு ஏற்பாட்டுக் குழுவில் கழகப் பொருளாளர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

பயிற்சி வகுப்புக்கான வகுப்புகள், நிகழ்ச்சி நிரல் இவற்றை தொகுத்து ஒருங்கிணைத்து ஒழுங்குபடுத்தும் பணியை கழக பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் மேற்கொண்டார்.

நிறைவாக பயிலரங்கில் கலந்துகொண்ட தோழர்கள், இந்த பயிலரங்கு மிகவும் பயனுள்ளதாக இருந்ததாகவும், பல கருத்துக்களை அறிந்து கொண்டதாகவும் கருத்து தெரிவித்தனர்.

## தோழர் விசு படத்திறப்பு; தலைவர் பங்கேற்பு



பெருந்துறை ஒன்றிய திவிக செயலாளர் தோழர் விசு அவர்களின் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்வு 23.05.2024 அன்று, மேட்டுப்புதூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு கழக வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன் தலைமை தாங்கினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, விசுவின் படத்தினை திறந்து வைத்து நினைவேந்தல் உரையாற்றினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted May 31, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran